**தலைப்பு 259 – மாத்தளை மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு - 259 மாத்தளை மாவட்டச் செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 22 ஆம் திகதி மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

மாவட்டச் செயலகத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 880.20 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 784.79 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மாவட்டச் செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 95.41 மில்லியன் அதாவது 10.84 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவினம் | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 584.20 | 579.23 | 4.97 | 0.85 |
| மூலதனம் | 296.00 | 205.56 | 90.44 | 30.55 |
| மொத்தம் | 880.20 | 784.79 | 95.41 | **10.84** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக மாத்தளை மாவட்ட செயலகத்திற்கு 28 அமைச்சுக்கள் மற்றும் 18 திணைக்களங்களினால் ரூபா 2,094 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 1,709 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 385 மில்லியன் அதாவது 18.39 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாத்தளை மாவட்டச் செயலகத்திற்குரிய 25901 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| 45.00 | 44.92 | 30.00 | 38.15 | 150.00 | 130.10 |

**2.3 பொது வைப்புக் கணக்கு**

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 06 வைப்புக் கணக்குகளுக்குரிய 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 219.39 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0054/000 | 6.15 |
| 6000/0000/00/0002/0072/000 | 3.53 |
| 6000/0000/00/0013/0044/000 | 25.65 |
| 6000/0000/00/0016/0024/000 | 109.05 |
| 6000/0000/00/0017/0005/000 | 74.54 |
| 6000/0000/00/0018/0031/000 | 0.47 |
| மொத்தம் | 219.39 |

### 2.4 கணக்காய்வு அவதானிப்பு

மாத்தளை மாவட்ட செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

மாத்தளை மாவட்ட செயலகத்தினால் கிழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | நாவுல மற்றும் தம்புள்ள பிரதேச செயலகங்களில் கணனிகள், உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ii) | கலேவல மற்றும் அம்பன்கங்க கோரளை பிரதேச செயலகங்களின் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை |
| (iii) | அம்பன்கங்க கோரளை, தம்புள்ள மற்றும் பள்ளேபொல பிரதேசங்களில் மின்சார உபகரணப்பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | போணப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மாவட்ட செயலகத்தினதும் 04 பிரதேச செயலகங்களினதும் நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (v) | மாவட்ட செயலகத்தின் பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (vi) | மாவட்ட செயலகத்தினதும் கலேவல பிரதேச செயலகத்தினதும் எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் இருப்புப் புத்தகம் | நிதிப்பிரமாணம் 1647 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.2.1 பாதீட்டு முரண்கள்**

04 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டின் 21 சதவீதம் முதல் 48 சதவீதம் வரையிலான வீழ்ச்சியினைக் கொண்டிருந்தது.

**3.2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பயன்பாடு**

ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் மாவடட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அமைச்சுக்கள் மற்றும் 08 திணைக்களங்களினால் 08 மூலதன செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 264.42 மில்லியன் நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 135.00 மில்லியன் தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் யட்டவத்த மற்றும் மாத்தளை பிரதேச செயலகங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவுத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 05 வகையான விளையாட்டுப் பொருட்களில் 38 அலகுகள் பகிர்ந்தளிக்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டது.

(இ) 2016 ஆம் ஆண்டின் தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிடமிருந்து கிடைத்த நிதி ஏற்பாடுகளின் அடிப்படையில் நாவுல, ஓபல்கல, வறாகொல்ல கிராமப்பகுதி வீதிகளில் 125 மீற்றர் தூரத்திற்கு கொங்கிறீட் இடுவதற்காக ரூபா 692,520 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த வீதியின் ஒரு பகுதியை சமப்படுத்துவதற்காக ரூபா 26,790 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதன் அளவிடை பெறப்பட்ட முறையை விளக்குவதற்கு தவறியிருந்ததுடன் பெறப்பட்ட அளவிடையின் பிரகாரம் பக்க வடிகாண் வெட்டும் போது ரூபா 5,380 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நாவுல, ஓபல்கல, வறாகொல்ல வீதியில் சிறிய மதகு ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தபோதிலும் மேலிருந்து வருகின்ற நீர் மதகினுள் சென்றபோதிலும் நீர் வெளியே வரும் வகையில் வடிகாண் உரிய பிரகாரம் இணைக்கப்படாமையினால் நீர் வடிகாண் நெடுகிலும் கீழிறங்கிச் செல்லாமையினால் ரூபா 73,120 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட மதகிலிருந்து எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(உ) நாவுல பிரதேச செயலத்தினால் நிகுல பொபெல்ல வீதியின் (பன்சல வீதி) தொடக்கப் பகுதியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,088,516 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் வீதியின் வடிகாணுக்கு கொங்கீரீட் இடும் போது குழிகளுக்கு 1.537 மீற்றர் கியூப் கொங்கிரீட் குறைவாக இடப்பட்டமையினால் ரூபா 24,241 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டு வரையில் ரூபா 6,265,078 செலவிடப்பட்டிருந்த ஹபறகஹமட கைஇயந்திர புடவைக்கைத்தொழில் நிலையம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கட்டிடம் அதிசக்திவாய்ந்த மின்சார முறைமைக்கு கீழாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ii) சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) கல்வனைஸ் மற்றும் இரும்பு பயன்படுத்தப்பட்டு கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(iv) அசாதாரண உயரத்திலுள்ள கூரையின் ஓரங்கள் (வடிம்பு) சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

(v) நலிவான கொங்கிரீட் கலவையின் காரணமாக தரை வெடித்திருந்தது.

(vi) சுவர் வெடித்துக் காணப்பட்டது.

(vii) வடிகாண் முறைமை அமைக்கப்படாமல் சீமெந்து அல்லது அதற்குச் சமமான கலவையொன்று இடப்பட்டிருந்தது.

(viii) ஒட்டுமொத்தமாக கட்டிடத்தின் வடிவமைப்பு, நிலத்தைத் தெரிவு செய்தல், மதிப்பீடு தயாரித்தல், ஒப்பந்தத்தை கையளித்தல், நிர்மாண மேற்பார்வை மற்றும் வளங்களைப் பயன்படுத்துதல் என்பன மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டதுடன் 2017 யூன் மாதம் வரையிலும் இந்தக் கட்டிடம் இலக்கிடப்பட்ட பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) ஹபரகஹமட புடவைக் கைத்தொழில் செயற்திட்டத்திற்காக நாவுல பிரதேச செயலகத்தினால் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,456,607 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 43 தையல் இயந்திரங்களில் 23 உம், 11 கத்தரிக்கோல்களும் அதற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட 240 யார் சேட் துணிகளும் மற்றும் 48 நூல் பந்துகளும் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக துருப்பிடிக்கும் வகையில் நாவுல பிரதேச செயலகத்தில் காணப்பட்டது.

(ஏ) தம்புள்ள பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் ரீ.பீ. தென்னக்கோன் கலாசார நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 11,786,165 செலவிடப்பட்டிருந்தது. அந்தக் காணி தொடர்பாக காணப்பட்ட சர்ச்சைக்குரிய நிலைமையின் காரணமாக நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டு 2016 ஆம் ஆண்டில் கிடைத்த நிதி ஏற்பாடு மீள அனுப்பப்பட்டிருந்தது. 2017 யூன் மாதம் வரையிலும் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின்

அடித்தள மாதிரிக்குரிய வேலைப் பகுதி நிறைவேற்றப்பட்டு 2 வருடங்களாக அழிவிற்கு உட்பட்டுக் காணப்பட்டதுடன் இது இலக்கமிடப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாத செயற்திட்டத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்தது.

(ஐ) கட்டிடம் நிர்மாணிக்கப்படுகின்ற நிலத்தின் சட்ட ரீதியான உரித்தை உறுதிப்படுத்திக் கொண்டு செயற்திட்டத்தை ஆரம்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் தம்புள்ள பிரதேச செயலகப் பிரிவில் தித்தவல்கொல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள தனியாருக்கு உரித்தான காணியொன்று முறையான பரிகாரம் கையேற்கப்படாமையால் ரூபா 457,332 தொகை செலவில் சிகிச்சை / உடற்பயிற்சி நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஒ) நாவுல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் லிஹினிபிட்டிய நீர் உத்தேசத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிலிருந்தும் தொடர் வேலை நிதியாகவும் கிடைத்த நிதி ஏற்பாட்டில் 2016 ஆம் ஆண்டின் போது 1053 மீற்றர் நீளத்திற்கு நீர்க் குழாய்களை பதிப்பதற்காக ரூபா 2,292,855 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட பகுதிகளில் கல்தூள் இடப்பட்டிருக்கவில்லை.

(ii) 03 அடி ஆழத்தில் வெட்டி மணல் இட்டு நீர்க்குழாய் பதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சில இடங்களில் அந்த நீர்க்குழாய் நிலத்திற்கு மேல் வெளிப்பட்டுக் காணப்பட்டது.

(iii) நீர்க்குழாய் பதிக்கப்பட்ட வீதியில் ஜீ.ஐ.குழாயுடன் இணைப்பதற்கு பீ.வீ.சீ. குழாய் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iv) 2017 யூலை 19 ஆம் திகதி வரையிலும் நீர் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) உக்குவெல பிரதேச செயலகத்தில் 2014 ஆம் ஆண்டில் மாகாண எழுச்சி (மாகாணநெகும) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எல்கடுவ நகரத்தில் விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 5,100,000 தொகையான நிதி ஏற்பாடுகளில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 4,281,688 தொகை செலவிடப்பட்டிருந்தது. விளையாட்டு மைதானத்தின் சுவர் முழுமையாக பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் மண் இட்டு அமைக்கப்பட்டிருந்தது. இதனால் விளையாட்டு மைதானமொன்றாக பாவனைக்கு எடுக்கப்படாதிருந்த போதும், நிதி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருந்தும் பொது மக்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் கிடைக்கப் பெறாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஔ) உக்குவெல பிரதேச செயலகத்தின் மூலம் 2014 ஆம் ஆண்டில் கமநெகும அபிவிருத்தி உத்தேசத்திட்டத்தின் கீழ் அரைவாசி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த உடங்கமுக சனசமூக மண்டபத்திற்காக 2015 ஆம் ஆண்டிலும் 2016 ம் ஆண்டிலும் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருக்காமையினால் 2014 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 254,416 தொகை பயனற்ற செலவினத்திற்குள்ளாகியிருந்தது.

(க) 2012 ம் ஆண்டின் போது ரூபா 866,539 செலவில் ஆரம்பிக்கப்பட்ட நாவுல பிரதேச செயலகப் பிரிவில் ஓபல்கல நீர் உத்தேசத்திட்டத்திற்காக 2014 ஆம் ஆண்டில் ரூபா 1,000,000 நிதி ஏற்பாடு கிடைத்திருந்தது. நீர்த்தேக்கத்தில் போதியளவான நீர் காணப்படாமையினால் இந்த செயற்றிட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(கா) 161 குடும்பங்களுக்கு அதாவது 558 நலனாளிகளுக்கு நீரை வழங்கும் நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட நாவுல மொறகஹமட குடிநீர் செயற்திட்டத்திற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 500,000 நிதி ஏற்பாடு கிடைத்திருந்தது. அந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 64,050 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 342,500 கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் தொடர்வேலை செயற்திட்டமொன்றாக பெயரிடப்பட்ட தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிலிருந்து ரூபா 300,000 தொகையும் கிடைத்திருந்தது. நீர்க்குழாய் பதித்தல், நீர்த்தேக்கங்களுக்கு அண்மையிலுள்ள கிணற்றுக்கு பக்கச் சுவரொன்றை நிர்மாணித்து புதிய நீர் வழங்கும் இணைப்பை பெற்றுக் கொள்வதற்கு ரூபா 564,725 தொகை செலுத்தப்பட்டிருந்தது. நீர்த்தேக்கத்தின் நிர்மாணத்திலுள்ள நலிவினால் நீர்க்குழாய்களில் துண்டுக் கழிவுகள் மற்றும் வண்டல் மண் உட்புகுந்திருந்தது. அதன் காரணமாக நீர் வழிந்தோடி வராமையினால் நீர் பகிர்ந்தளித்தல் இடம்பெற்றிருக்கவில்லை.

### 3.3 பொது வைப்பு கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 02 வருட காலத்தை விஞ்சிய ரூபா 5,889,053 கூட்டுத்தொகையான 137 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நாவுல பிரதேச செயலகத்திற்கு பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 297,410 தொகை உரிய பணிகளுக்காக பயன்படுத்தாமலும் அல்லது தீர்க்கப்படாமலும் 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வைப்புக்கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

25901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத் திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 730,710 தொகை 01 வருடம் முதல் 15 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்த நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

(ஆ) மாவட்ட செயலகத்தினால் கடன் செலுத்தும் போது பின்பற்றப்பட வேண்டிய ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்படாமல் ரூபா 8,584 கடன் தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்ட பிரகாரம் சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|---|
| | | | ஆண்டு |
| (i) | கட்டிடம் | 02 | 02 |
| (ii) | மோட்டார் சைக்கிள் | 07 | 17 |
| (iii) | இயந்திரப் பொறிகள் | 03 | 02 |

(ஆ) **வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்டோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலகக் அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை 2017 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மாவட்ட செயலகம் மற்றும் தம்புள்ள பிரதேச செயலகம் என்பவற்றினால் 2017 யூன் 30 ஆம் திகதி வரையிலும் அந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2015 ஆம் ஆண்டிற்காகவே நடாத்தப்பட்டிருந்தது.

(ii) 2015 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் விற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்ட 05 பிரதேச செயலகங்களில் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 88,685 தொகையான 116 பொருள் அலகுகள் தொடர்பாக கணக்காய்வுத் திகதியான 2017 சனவரி 31 வரையிலும் நிதிப்பிரமாணம் 772(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) **வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

மாத்தளை மாவட்ட செயலக வளவில் புதிய நிர்வாகக் கட்டிடத்தொகுதியை நிர்மாணிப்பதற்கு பழைய கட்டிடம் உடைத்து அகற்றப்பட்டதன் காரணமாக வளாகத்தில் காணப்பட்ட 06 அலுவலகங்கள் தனியார் துறையின் கட்டிடங்களில் தபாபிக்கப்பட்டு அதற்காக வருடமொன்றிற்கு ரூபா 2,126,400 தொகையான வாடகை செலுத்தப்பட்டுக்கொண்டிருந்தது. எனினும் மாவட்ட செயலக வளவில் உள்ள 368 சதுர அடி பரப்பளவுடைய கட்டிடமொன்று 2002 ஆம் ஆண்டு முதல் ஊழியர்களின் சங்க அலுவலகத்திற்கும் 64 சதுர அடி பரப்பவுடைய கட்டிடம் ஓய்வூதியக்காரர்களின் சங்கத்திற்கும் எவ்வித கொடுப்பனவுமின்றி 14 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) **தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

மாவட்ட செயலகத்தினால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத 1 வருடத்திற்கு குறைவான காலமாக கொண்டுவருகின்ற பொறுப்புக்கள் ரூபா 3,611,510 ஆகும்.

**3.6 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| நிதிப்பிரமாணம் 880 | 98,500 | மாவட்ட செயலகத்தில் பிணை வைக்க வேண்டிய 12 உத்தியோகத்தர்கள் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| 2015 யூன் 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | 492,460 | உரிய செயற்பாடு முடிவடைந்து 10 நாட்களுக்குள் உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் மாவட்ட செயலகத்தை உள்ளடக்கிய யட்டவத்த மற்றும் கலேவல பிரதேச பிரதேச செயலகங்களில் 27 சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதிகள் 11 நாட்கள் முதல் 61 நாட்கள் வரையிலான கால வீச்சிலான தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது. |
| (இ) தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | | |
| 2015 யூலை 07 ஆம் திகதிய BD/GPS/130/9/14/MC-ii ஆம் இலக்க கடிதத்தின் 2 ஆவது பந்தி | 554,000 | யட்டவத்த மற்றும் அம்பன் கங்க கோரளை பிரதேச செயலகங்களில் சேவையில் ஈடுபட்டிருந்த நான்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மோட்டார் சைக்கிள் உரித்தற்ற ஆசிரியர் சேவை மற்றும் அரச முகாமைத்துவ சேவைகளுக்காக நிரந்தரமாக விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், மோட்டார் சைக்கிள்களின் சந்தைப் பெறுமதி அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) வர்த்தமானியின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட அறிவித்தல்

| | | |
|---|---|---|
| 2009 பெப்ரவரி 20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் செயல் நடைமுறை விதியின் 1 ஆவது தொகுதியின் xvii ஆம் அத்தியாயத்தின் 202 ஆம் ஏற்பாடுகள் | – | மாத்தளை பிரதேச செயலகத்தில் 06 வருடங்கள் முதல் 24 வருடங்கள் வரை சேவைக் காலத்தை பூர்த்தி செய்த 05 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டிருந்தனர். |

**3.7 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்**

செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாது கைவிடப்படுதல், செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்படுதல் மற்றும் செயற்திட்ட தாமதம் தொடர்பாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) **செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடல்**

கலேவல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திற்குரிய கந்தன்கமுவ பாடசாலை மாவத்தையை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 300,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், பழைய மதிப்பீட்டின் பிரகாரம் வீதியை அபிவிருத்தி செய்தல் வசதியீனமாக இருந்ததாக ஒப்பந்தகாரரால் அறிவிக்கப்பட்டமையின் காரணமாக அந்த வேலை ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) **செயற்றிட்டத்தை பூர்த்தி செய்யாது கைவிடல்**

மாவட்ட செயலகத்தினாலும் 05 பிரதேச செயலகங்களினாலும் கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் 11 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்டிருந்தன.

| | **செயற்திட்டம்** | **மதிப்பிடப்பட்ட கிரயம்** | **ஆரம்பிக்கப்பட்ட திகதி** | **2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் செலவினம்** | **கைவிடப்பட்டமைக்கான காரணம்** |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | **ரூபா** | |
| (i) | மாத்தளை சந்தி முதல் பத்கொலகொல்ல வீதி | 2,000,000 | 2014 | 392,000 | மாநகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வீதியை விரிவுபடுத்தல் |
| (ii) | தித்தவெல்கொல்ல சிகிச்சை / உடற்பயிற்சி நிலையம் | 1,000,000 | 2014 | 457,331 | காணியின் உரித்து கையேற்கப்படாமை |
| (iii) | பண்டாரபொல மகா வித்தியாலயத்தின் பாடசாலைக் கட்டிடம் | 8,250,000 | 2014 | 1,588,006 | ஒப்பந்தகாரர் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தமை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iv) | செலகம விளையாட்டு மைதான அபிவிருத்தி | 490,870 | 2014.10.11 | 425,956 | சுவரொன்று நிர்மாணிக்க வேண்டியிருந்ததுடன் அதற்காக அதிக செலவினமொன்றைச் செய்ய வேண்டியிருந்தது |
| (v) | தளுவெல சேவை நிலைய நிர்மாணம் | 261,274 | 2014.10.12 | 146,780 | காணி தீர்க்கப்படாமை |
| (vi) | உடகம நீர் உத்தேசத் திட்டம் | 1,000,000 | 2014.10.30 | 575,118 | பிரதேசத்தில் விவசாய மக்களின் எதிர்ப்பு ஏற்பட்டமை |
| (vii) | கலல்பிட்டிய கங்கொட கிராமத்திற்கு நீர் நீடிப்பை வழங்கல் | 150,603 | 2014.10.13 | - | புதிய வேலை பகுதியை செய்வதற்கான காலம் போதியளவில் காணப்படாமை |
| (viii) | ரங்கம வெலிகொட்டுவ கிராமிய வீதியின் பக்கச் சுவர் நிர்மாணம் | 2,196,000 | 2014.12.10 | - | செயற்திட்டத்திற்காக காலம் போதியளவில் இன்மை மற்றும் போதியளவான நலனாளிகள் போதுமான அளவு காணப்படாமை |
| (ix) | மகுலேமட மாணிக்காவத்த வீதியை அபிவிருத்தி செய்தல் | 784,000 | 2014 | 500,000 | புதிய வேலைப் புதியை நிறைவேற்றுவதற்குரிய காலம் போதியளவில் காணப்படாமை |
| (x) | கலவுடஹேன மற்றும் பிறேண்டிகல பிரதேசத்தை சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்தல் | 5,000,000 | 2014 | 1,311,652 | சுற்றாடல் எதிர்ப்பு |
| (xi) | ரீ.பீ.தென்னக்கோன் கலாசார நிலைய நிர்மாமணம் - தம்புள்ள | 43,446,598 | 2014 | 11,786,165 | காணி தொடர்பாகக் காணப்படுகின்ற பிரச்சினையான நிலை |

(இ) **நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயல்முன்னேற்றம் பெறப்படாதிருந்த செயற்திட்டங்கள்**

நிர்மாணங்கள் தொடர்பாக பல்வேறு நிறுவனங்களுக்கும் இலங்கை மின்சார சபைக்கும் நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் வேலை தொடர்பாக உரிய செயல்முன்னேற்றமொன்றைப் பெறாதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

(i) தம்புள்ள பிரதேச செயலகத்தில் 02 மின்சார நீடிப்புகளுக்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 980,952 தொகையொன்று இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2017 யூன் மாதம் வரையிலும், மின்சார வழங்கல் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) உலகுவெல பிரதேச செயலகத்திற்குரிய கலவுடஹேன மற்றும் பிரேண்டிகல பிரதேசங்களை சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 5,000,000 மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. ஆரம்ப பூங்கா

நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்திற்கும் மற்றும் ஏனைய ஆரம்ப செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக நில அளவைத் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் என்பவற்றிற்கு 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 1,311,652 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2017 மே மாதம் வரையிலும் எந்த நிர்மாண நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.8 செயலாற்றல்**

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) **போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

மாவட்ட செயலகத்தால் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) ரூபா 550 மில்லியன் தொகை மதிப்பீட்டின் கீழ் மாவட்ட செயலகத்திற்கு புதிய நிர்வாகக் கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு 2011 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 09 மில்லியன் தொகையும், 2015 ஆம் ஆண்டில் ரூபா 150 மில்லியன் தொகையும், 2016 ஆம் ஆண்டில் ரூபா 200 மில்லியன் தொகையும் வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கூட்டுமொத்தமாக ரூபா 123.67 மில்லியன் செலவினம் மாத்திரம் செய்யப்பட்டிருந்தது. கட்டிடங்கள் திணைக்களத்தின் மூலம் இந்த நிர்மாண செயற்பாடுகள் நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும் நிர்மாணங்கள் தொடர்பாகக் காணப்படுகின்ற மந்தமான நிலை மற்றும் திட்டமிடப்பட்ட வேலை அட்டவணையின் பிரகாரம் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படாமை என்பவற்றின் காரணமாக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் முறையே ரூபா 140.5 மில்லியனும், மற்றும் ரூபா 86 மில்லியனும் நிதி ஏற்பாட்டில் சேமிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாடுகளில் ரூபா 86 மில்லியனும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) மீளாய்வாண்டில் ரூபா 396,175 தொகை செலவில் ரத்தொட்ட பிரதேச செயலக வளவில் வேலி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

- அந்த கொங்கிரீட் தூண் மாதிரிகளுக்கு இணங்கியிருக்கவில்லை.
- கொங்கிரீட் தூண் நிர்மாணிக்கப்பட அடித்தளம் வலுவில் குறைந்தமை
- மாதிரிகளுக்கு இணங்காத வலை மற்றும் ஜீ.ஐ.குழாய் பயன்படுத்தப்பட்டிருந்தது.
- முட்கம்பி வேலை வலுவானதாக அமைக்கப்படாமை.

**(ஆ) திட்டமிடல்**

2016 ஆம் ஆண்டிற்காக 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் விவசாய அலகின் மூலம் 05 நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக நிதி ஏற்பாடு கிடைக்காமையினால் அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு புறம்பாக உத்தேசிக்கப்பட்ட 05 பழவகைக் கிராமங்களை அமைக்கும் செயற்திட்டத்தில் 03 பழவகைக் கிராமங்கள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

### 3.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மாத்தளை மாவட்ட செயலகத்தில் விலை நிர்ணயக் குழுவினால் நிர்மாணப் பொருட்கள், தொழிலாளர் கட்டணங்கள் மற்றும் போக்குவரத்து கட்டணங்களின் விலை என்பவற்றைத் தீர்மானிக்கும் போது அசாதாரணமாக அதிக விலை தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதனால் அதிக விலை பயன்படுத்தப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டமையால் அவற்றின் கிரய மதிப்பீடு அதிகரித்த பெறுமதியுடன் உயர்ந்த பெறுமதியில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டமையால் அரசாங்கத்திற்கு பாரிய நிதி நட்டமொன்று ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

**அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளைப் பின்பற்றாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் தேசிய போட்டியாளர் கேள்வி கோரும் போது 21 நாள் காலம் வழங்க வேண்டியிருந்த போதிலும் மாவட்ட செயலகத்தில் நிறைவேற்றப்பட்ட ரூபா 24,005,704 பெறுமதியான 03 வேலைகளுக்கு கேள்வி கோரும் போது 14 நாள் காலமொன்று வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கேள்விகள் பதிவுத் தபால் மூலம் அல்லது முத்திரையிட்ட உறையின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் யட்டவத்த, கலேவல, மாத்தளை மற்றும் நாவுல பிரதேச செயலகங்களில் ரூபா 1,144,417 தொகையான கொள்வனவுக்குரிய பெறுகைகளுக்காக கேள்வி கோரல் அல்லது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.6 வழிகாட்டியின் பிரகாரம் உரிய மாதிரிகள் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் அளவு குறிப்பிடப்படாமல் உக்குவெல மற்றும் யட்டவத்த பிரதேச செயலகங்களில் ரூபா 282,150 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 3.11 நட்டமும் இழப்பும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மாவட்ட செயலகத்திலும் யட்டவத்த பிரதேச செயலகத்திலுமுள்ள இரண்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 88,665 பெறுமதியான மடிக் கணனியொன்றும் ரூபா 56,000 பெறுமதியான டெப் இயந்திரமொன்றும் தொலைந்து போயிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்ட செயலகத்தின் திறன் மேம்படுத்தல் பிரிவில் காணப்பட்ட ரூபா 87,994 பெறுமதியான கணனி இயந்திரமொன்று தெலைந்து போய் 04 வருட காலம் கடந்திருந்த போதிலும் அது தொடர்பாக வழங்கப்பட்டிருந்த சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாத்தளை பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திற்குரிய மாத்தளை மாநகர சபைக்கு முன்னால் உள்ள பழைய ''சாட்சி மடுவ'' கட்டிடம் 1980 ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் வாடகை அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் மாநகர சபைக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளுக்குரியதாகச் செலுத்த வேண்டிய நிலுவை வரித்தொகையையும் உள்ளடக்கி 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிட வேண்டிய மொத்த நிலுவை வாடகைத் தொகை ரூபா 190,400 ஆக இருந்த போதும், அந்த நிலுவை வாடகைப்பணம் 2017 யூன் மாதம் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.13 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

மாவட்ட செயலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத பந்திகளுக்குரிய தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2007 | 7.5(அ) | செயற்திட்டத்தை அமுல்படுத்துவதிலுள்ள பலவீனம் |
| 2008 | 7.4 (இ) | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை |
| 2010 | 4.10 (அ) | சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் |
| 2011 | 4.10 (அ) | சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் |
| 2012 | 1.7 | சொத்துக்கள் முகாமைத்துவம் |
| 2014 | 3.5 (அ) | சொத்துக்கள் முகாமைத்துவம் |
| 2015 | 3.6 (ஆ) | சொத்துக்கள் முகாமைத்துவம் |
| 2015 | 3.9(அ)(i) | பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள் |
| 2015 | 3.12 (ஈ) | சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் |

### 3.14 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணிகளைக் கையேற்கும் போது மாத்தளை, தம்புள்ள, அம்பன்கங்க கோரளை, பள்ளேபொல, ரத்தொட்ட மற்றும் உக்குவெல என்ற பிரதேச செயலகங்களில் 54 சந்தர்ப்பங்களின் போது 02 வருடங்கள் முதல் 35 வருடங்கள் வரையிலான காலதாமதம் ஏற்பட்டிருந்தும் கையேற்கும் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள, உக்குவெல, நாவுல மற்றும் கலேவல பிரதேச செயலகங்களில் 01 வருடம் முதல் 34 வருடங்கள் வரையிலான கால தாமதத்துடன் சனாதிபதியால் கையொப்பமிடப்பட்ட 273 ஜயபூமி, இசுறுபூமி மற்றும் சுவர்ண பூமி கொடுப்பனவுப் பத்திரங்களை நலனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது பிரதேச செயலகங்களில் நிறுவத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3.15 மனித வள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 63 | 49 | 14 |
| (ii) | மூன்றாம் நிலை | 36 | 23 | 13 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,643 | 1,450 | 193 |
| (iv) | ஆரம்ப நிலை | 131 | 111 | 20 |
| | மொத்தம் | 1,873 | 1,633 | 240 |

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அங்கீகரிக்கப்பட்ட பதிவியணியில் 240 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் மாவட்ட செயலகத்தால் அந்த வெற்றிடங்களை முறையான பிரகாரம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பயனற்ற மனித வளம்**

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் மூலம் கையளிக்கப்பட்ட பட்டப்பின் படிப்பினை பயிலுவதற்காக யட்டவத்த பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் கற்கை விடுமுறை பெற்றிருந்ததுடன் மகப்பேற்று விடுமுறை பெற்றதன் பின்னர் அவர் 2016 ஆகஸ்ட் 15 ஆம் திகதி மாத்தளை மாவட்ட செயலகத்தில் சேவைக்கு அறிக்கையிடப்பட்டிருந்தார். 2017 யூன் மாதம் வரை அந்த உத்தியோகத்தருக்கு எவ்வித கடமைகளும் கையளிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அவருக்கு 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சம்பளமாக ரூபா 326,719 தொகை செலுத்தப்பட்டிருந்தது.